ஊடக அறிக்கை | 24 ஜூன் 2026

**முன்மொழியப்பட்ட "இலங்கை ஊடகத் துறைசார் நிபுணர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம்" சட்டமூலமும் மும்மடங்கு சட்ட ஒடுக்குமுறையும்: டிஜிட்டல் சிவில் வெளியும் கருத்துச் சுதந்திரமும் ஆபத்தில்**

சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு (Collective for Social Media Declaration - CSMD), 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசாங்கத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "இலங்கை ஊடகத் துறைசார் நிபுணர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம்" சட்டமூலம் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையையும் எதிர்ப்பையும் பதிவு செய்கின்றது. ஊடகத் துறையில் தொழில்முறை தரநிலைகளை அறிமுகப்படுத்தி அவற்றைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டதாக இச்சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் இது நாட்டின் டிஜிட்டல் சிவில் வெளியையும் சுயாதீன ஊடகவியலையும் விமர்சனக் குரல்களையும் கட்டுப்படுத்துவதற்கான ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுகின்றது.

இச் சட்டமூலமானது நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அதன் ஆரம்பக்கட்ட செயற்பாடுகளிலேயே நேரடி அரசியல் தலையீடுகளுக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றமை ஆதாரபூர்வமாகத் தெளிவாகின்றது. பிரிவு 5(4) இன் படி, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து முதல் வருடத்திற்காக நியமிக்கப்படும் 'இடைக்கால சபை' (Interim Council) முழுமையாகப் பொறுப்பதிகார அமைச்சரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக அமையும். அமைச்சின் செயலாளரினதும் அமைச்சரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பெயரிடப்படும் உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபைக்கு, நிரந்தர சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை அளவுகோல்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. இது நிறுவனத்தின் ஆரம்ப அத்திவாரமானது சுயாதீனமான தொழில்முறை மட்டமின்றி, அரசியல் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்படுவதற்கு வழிவகுப்பதாகும்.

இந்த சூழ்நிலையில், இந்த மசோதா மூலம் குறிப்பாக டிஜிட்டல் தளத்திற்கும், சமூக ஊடக செயல்பாட்டாளர்களுக்கும் மற்றும் உள்ளடக்க உருவாக்குநர்களுக்கும் (Content creators) ஏற்படுகின்ற முக்கிய மூன்று அச்சுறுத்தல்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

**1. "ஊடகத் துறைசார் நிபுணர்" என்ற வரையறைக்குள் டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்குநர்களை உள்ளடக்குதல்**

இச்சட்டமூலம் பாரம்பரிய ஊடகவியலாளர்களை மட்டுமன்றி YouTube, Facebook, TikTok உள்ளிட்ட இணையத் தளங்களில் செயற்படும் உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் உள்ளடக்கத் தொகுப்பாளர்களையும் "ஊடகத் துறைசார் நிபுணர்கள்" என்ற சட்ட வரையறைக்குள் கொண்டு வருகின்றது. மேலோட்டமாக இது அவர்களுக்குக் கிடைக்கும் ஒரு தொழில்முறை மதிப்பாக அல்லது அங்கீகாரமாகத் தோன்றினாலும், இதன்

உண்மையான மறைமுக நோக்கம் சுயாதீன குடிமக்களை நிறுவன மற்றும் அரச ஒழுங்குமுறை வரம்பிற்குள் (Regulatory framework) கொண்டு வருவதாகும்.

### 2. தெளிவற்ற 'முறையற்ற நடத்தை' விதிகள் மற்றும் ஒழுக்கக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் ஆபத்து

இச்சட்டமூலத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ள நிர்வாக சபைக்கு தொழில்முறை ஒழுக்க விதிகளை வகுப்பதற்கும் உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு காணப்படும் மிகக் கடுமையான சட்டப்பூர்வ குறைபாடு என்னவெனில், 'முறையற்ற நடத்தை' விதிகள்' என்ற பதம் சட்டமூலத்தில் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இதனை பின்னர் நிர்வாக சபையினால் உருவாக்கப்படும் விதிமுறைகளின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதிப்பது, அரசாங்கத்தையோ அதிகாரிகளையோ விமர்சிக்கும் உள்ளடக்கங்களை "ஒழுக்க மீறல்" எனப் பெயரிட்டு சுயாதீன ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர்களை இலக்காகக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்குகின்றது.

### 3. ஏற்கனவே நடைமுறையில் உள்ள மற்றும் முன்மொழியப்பட்டுள்ள சட்டங்களுடன் இணையும் "மும்மடங்கு சட்ட அச்சுறுத்தல்"

இச்சட்டமூலத்தின் கீழ் ஒரு சமூக ஊடக செயற்பாட்டாளரின் தொழில்முறை பதிவு இரத்து செய்யப்பட்டால், அதன் விளைவு வெறும் தொழில்முறை தண்டனையாக மட்டுப்படாது. மாறாக, இது ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் (Online Safety Act - OSA) மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (Protection of the State from Terrorism Act - PSTA) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு ஆபத்தான "மும்மடங்கு சட்ட வலைப்பின்னலை" உருவாக்குகின்றது.

ஒரு நடைமுறை உதாரணமாக: அரசாங்கத்தின் பாரிய அளவிலான ஊழலொன்றை வெளிப்படுத்தும் ஒரு சுயாதீன சமூக ஊடக செயல்பாட்டாளரின் (YouTube) தொழில்முறைப் பதிவை, இந்தச் சட்டத்தின் கீழ் 'நெறிமுறைகளை மீறிவிட்டார்' எனக் கூறி அவரது தகுதிச் சான்றிதழை/அங்கீகாரத்தை ரத்து செய்ய முடியும். அதன் பிறகு அவரை உத்தியோகபூர்வமற்ற ஒரு சாதாரண குடிமகனாக்கி, அவர் வெளியிட்டது போலித் தகவல் எனக் கூறி 'ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் (Online Safety Act) சட்டத்தின் கீழ் அந்த உள்ளடக்கத்தை இணையத்திலிருந்து நீக்கி அவருக்குத் தண்டனை வழங்கவும் முடியும். அதேபோன்று, இந்த வெளிப்படுத்தல் காரணமாக பொதுமக்களின் அதிருப்தி ஏற்பட்டால், அது அரசுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டும் செயலாக அர்த்தப்படுத்தப்பட்டு, முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைக் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் (அது நிறைவேற்றப்பட்டால்) பிடியாணை (Warrant) இல்லாமலேயே அவரைக் கைது செய்வதற்கான வழிமுறையும் இதன் மூலம் உருவாக்கப்படுகிறது.

**எங்களது கோரிக்கையும் வலியுறுத்தலும்**

சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய, மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட நெறிமுறைகளைக் கொண்ட சமூக ஊடகச் செயல்பாட்டிற்காகத் தோன்றி இயங்கும் ஒரு கூட்டமைப்பு என்ற வகையில், அந்த நெறிமுறைப் பின்னணியில் இருந்து எங்களது வலியுறுத்தலை முன்வைக்கிறோம்.

அரசியலமைப்பின் 14(1)(a) பிரிவின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தலுக்கு உள்ளாவதற்கும், சட்டரீதியான தண்டனைகளுக்கு அஞ்சுவதன் காரணமாக ஊடகவியலாளர்கள், குறிப்பாகச் சமூக ஊடகச்

செயல்பாட்டாளர்கள் தங்களைத் தாங்களே தணிக்கை செய்துகொள்ளும் ஒரு "சுய-தணிக்கை" (Self-Censorship) நோக்கிய இருண்ட யுகத்தை நாட்டின் டிஜிட்டல் தளத்திற்குள் உருவாக்குவதற்கு இந்தச் சட்டங்களின் கூட்டிற்கு முழுமையான ஆற்றல் உண்டு.

எனவே, தொழில்முறை என்ற பெயரில் சிவில் வெளியையும் விமர்சிக்கும் உரிமையையும் முடக்கும் இந்த சட்ட மூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். அத்துடன், நாட்டின் ஊடகச் சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்காக உடனடியாக ஒன்றிணையுமாறு அனைத்து சிவில் அமைப்புகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனநாயகத்தை மதிக்கும் குடிமக்களிடம் 'சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு' (Collective for Social Media Publication) என்ற வகையில் நாங்கள் மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு நம்பிக்கையுள்ள,

**சம்பத் சமரகோன்,**

அழைப்பாளர், | 'சமூக ஊடகப் பிரகடனத்திற்கான கூட்டமைப்பு' (CSMD)

தொலைபேசி: +94 777 248304

More Information: https://www.socialmedialanka.org/

**ABOUT CSMD:** The Social Media Declaration collective is a coalition established by civil society organizations, citizen activists, websites, and subject-matter experts, with the aim of promoting a 'human rights–based', Socially Responsible use of Social Media'. This collective is dedicated to advancing human rights, including digital rights, and to systematically analyzing online content through research, advocacy, training, awareness-raising, and critical inquiry. It continuously strives to foster and sustainably promote democratic discourse in online spaces grounded in internet freedom, transparency–openness, and democratic values. In this way, the collective remains committed to ensuring societal well-being through the influence of technology and to encouraging the development of responsible, ethical use of social media in the digital age.

The following organizations belong to this collective. **Sri Lanka Working Journalists Association | Jaffna Press Club | Eastern Provinces Journalists Forum | Centre for Policy Alternatives | Human Elevation Organization | Movement for Land and Agricultural Reform | ActNow Youth Campaign | Wedabima Media collective | National Collaboration Development | Foundation Best Vision foundation | Internet Media Action | maatram.org | vikalpa.org | groundviews.org**